நீதிமன்றங்களைத் தொடங்க வேண்டும். புதிய நீதிமன்றங்கள் திறக்கப்படுவதுபற்றி உயர் நீதிமன்றம்தான் முடிவெடுக்க வேண்டும். உயர் நீதிமன்றம் அரசுக்குப் பரிந்துரை செய்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி, அதற்கு மேல் நடவடிக்கை எடுப்பதற்கான வழிவகை அரசால் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**94**—

**பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி**

***5546—திரு. மு. சக்ரபாணி:**

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வானூர் தொகுதி, கிளியனூரில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, கிளியனூரில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி அவர்கள்.*

2017 ஜூன் 28]

**திரு. மு. சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன்.

என்னுடைய வானூர் சட்டமன்றத் தொகுதியில் 3 ஒன்றியங்களும், 98 ஊராட்சிகளும் உள்ளன. இங்கு 17 மேல்நிலைப் பள்ளிகளும், 15 உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. அந்தப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவ, மாணவியர்கள் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டுமென்றால், 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள விழுப்புரத்திற்கும், 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புதுவை மாநிலத்திற்கும், 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திண்டிவனத்திற்கும் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, அங்கு ஒரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானூர் தொகுதி அமைந்துள்ள விழுப்புரம் மாவட்டத்தில் இரண்டு அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 8 சுய நிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் என மொத்தம் 10 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. 2013–2014 ஆம் கல்வியாண்டில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், காட்டுவனஞ்சூர் கிராமத்தில் புதிதாக ஓர் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் தாலுகா, அரகண்டநல்லூரில் ஓர் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியும் இயங்கி வருகிறது. இதில் மாணவர்களுடைய சேர்க்கைக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் முழுமையாகப் பூர்த்தியாகவில்லை. அதனடிப்படையில், மேலும் ஒரு பலவகைத்

தொழில்நுட்பக் கல்லூரியை அங்கே துவங்குவது குறித்து, அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி அவர்கள்.*

**திரு. மு. சக்ரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல புள்ளிவிவரங்களை இங்கே சொன்னார்கள்.* As per G.O., What are the rules and regulations, norms and conditions *என்று அமைச்சர் அவர்கள் சொன்னால், அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இதையெல்லாம் தொகுதி மக்களிடத்திலே சொல்ல முடியவில்லை. எனவே, பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி இல்லையென்றாலும், ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருமாறு தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளபடி, புதிய பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க வேண்டுமென்றால், அரசு விதிமுறைப்படி, மாநகராட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்தால் 1½ ஏக்கர் நிலமும், நகராட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்தால் 1½ ஏக்கர் நிலமும், கிராமப் பஞ்சாய்த்துக்குட்பட்ட பகுதியாக இருந்தால் 4 ஏக்கர் நிலமும் தேவை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிராமப்புறப் பகுதியில் அமைக்க வேண்டுமென்று கேட்கின்றார்கள். அங்கு 4 ஏக்கர் நிலம் கிடைத்தாலும்கூட, அந்தக் கல்லூரியைத் தொடங்குவதற்கு 18 ஆசிரியர் பணியிடங்களையும், 43 ஆசிரியரல்லாத பணியிடங்களையும் சேர்த்து, தொடர் செலவினமாக 17 கோடியே 62 இலட்சம் ரூபாயும், கட்டடப் பணிக்காக 32 கோடியே 52 இலட்ச ரூபாயும் மற்றும் கணினிகள், இயந்திரங்கள், அறைகலன்கள், நூலகப் புத்தகங்கள் மற்றும் இதர செலவினங்களுக்காக 4 கோடியே 50 இலட்சம் ரூபாயும் தேவைப்படுகின்றது. ஒட்டுமொத்தமாக பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றைத் தொடங்க வேண்டுமென்றால்,*

*2017 ஜூன் 28]*

*54 கோடியே 64 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இதையெல்லாம் கருத்தில்கொண்டுதான் அரசு பரிசீலனை செய்யும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்தேன்.*

*மேலும், அங்கே ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியையாவது தொடங்குவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். மாணவர்களுடைய நலன் கருதி, கடந்த ஐந்தாண்டுக் காலங்களில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிட்டத்தட்ட, 45 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், உறுப்புக் கல்லூரிகளையும் சேர்த்துத் தொடங்கியிருக்கிறார்கள். அதனடிப்படையில், வானூர் தொகுதிக்கு மேலும் ஒரு கல்லூரி தேவையென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வானூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிளியனூர் பகுதியில் ஒரு புதிய கல்லூரியைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும், மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.*

*முற்பகல் 10–35*

**திரு. கே.பி.பி. சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் தொகுதியிலே ஒரு கலைக் கல்லூரி இயங்கி வருகிறது. அந்த கலைக் கல்லூரி ஆரம்ப காலத்தில் ஒரு நடுநிலைப் பள்ளி இருந்த இடத்திலே துவங்கப்பட்டிருக்கின்றது. அந்தக் கலைக் கல்லூரியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ–மாணவிகள் பயின்று வருகிறார்கள். அந்தக் கலைக் கல்லூரியிலே அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாத நிலையிலே, 'மனம் இருந்தால் பறவைக் கூட்டில் மான்கள் வாழலாம், வழி இருந்தால் கடலுக்குள்ளே மலையைக் காணலாம்' என்பதற்கேற்ப, அந்த அளவில்கூட அந்தக் கலைக் கல்லூரி இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *மாண்புமிகு உறுப்பினர் சாமி, எப்பொழுது கவிஞரானீர்கள்? (சிரிப்பு)*

[*2017 ஜூன் 28*

**திரு. கே.பி.பி. சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நடுநிலைப் பள்ளிக்கூடம் இருந்த இடத்திலே குடிக்கத் தண்ணீர், கழிவறை போன்ற அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லாமல் அந்தக் கல்லூரி நடந்துகொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது ஒரு கல்லூரிக்கு என்னென்ன தேவை, எவ்வளவு நிதி ஆதாரம் வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் விளக்கமளித்தார்கள். அந்த விளக்கத்தின் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கல்லூரிக்கு வருகை தந்து பார்வையிட்டு, அங்கே பயில்கின்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ–மாணவியர்களுக்கும், அங்கே பாடம் சொல்லித்தருகின்ற ஆசிரியர்களுக்கும் போதுமான வசதிகளைச் செய்துதர வேண்டும். திருவொற்றியூர் நகரிலே பல்வேறு இடங்கள் இருக்கின்றன. அதில் ஒரு மாற்று இடத்தைத் தேர்வு செய்து அனைத்து வசதிகளும் உள்ள கட்டடங்களைக் கட்டி, புதிய கல்லூரியாக அமைத்துத்தர இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், எந்தப் பகுதியில் எங்கே கல்லூரி தேவையோ அங்கே கல்லூரி தொடங்கவேண்டுமென்ற எண்ணத்தோடுதான் கடந்த ஆறு ஆண்டுக் காலத்தில் 65 புதிய கலைக் கல்லூரிகளைத் தொடங்கி, அதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடு செய்து கட்டடங்கள் அனைத்தையும் முழுமையாகப் பூர்த்தியடையச் செய்து, மாணவர்களுடைய வசதிக்கேற்றாற்போல் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கும் மேலாக அந்த மாணவ–மாணவியருடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் சிறப்பு நிதியாக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அந்த வகையிலே பார்க்கின்றபோது கடந்த ஆறு ஆண்டுக் காலத்தில் 24 உறுப்புக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. அதிலே ஒன்றுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற*

*2017 ஜூன் 28]*

*திருவொற்றியூர் உறுப்புக் கல்லூரி. அந்த திருவொற்றியூர் உறுப்புக் கல்லூரிக்காக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓர் இடத்தைத் தெரிவு செய்து, அந்த இடத்தில் கல்லூரிக்காக நிதி ஒதுக்கீடு செய்து, 7 கோடியே 25 இலட்சம் ரூபாய்க்கு டெண்டர் விடப்பட்டு, ஒப்பந்ததாரரும் ஒப்பந்தம் எடுத்திருக்கிறார். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்றபொழுதே மாற்று இடத்தை என்று குறிப்பிட்டுக் காட்டினார்கள். ஆக, மாண்புமிகு அம்மா அவர்களால் தேர்வு செய்யப்பட்டு, டெண்டர் விடப்பட்ட இடத்திலே, பல்வேறு சூழ்நிலை காரணமாக அந்தப் பணிகளைத் தொடங்கவிடாமல் இன்றுவரை தடை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த இடத்திற்கு மாற்றாகவோ அல்லது அதே இடத்திலோ ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகப் பயன்படுத்துகின்ற வகையிலே, மாண்புமிகு அம்மாவின் அரசு முனைப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மேலும், 2010–2011 ஆம் ஆண்டு கடந்த திராவிட முனனேற்றக் கழக ஆட்சியின் கடைசி நேரத்திலே 8 உறுப்புக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று அறிவித்துவிட்டுச் சென்றார்கள். அதற்கு முழுமையாக இடங்களைத் தேர்வு செய்து, நிதியும் ஒதுக்கீடு செய்து, கட்டடப் பணிகள் முழுமையாக முடிவுபெற்று அந்த மாணவ–மாணவிகளுடைய வசதிக்கேற்றாற்போல் செய்தது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே இந்த அரசானது தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, திருவொற்றியூர் கல்லூரிக்கு கட்டடங்கள் கட்ட தேர்வு செய்யப்பட்ட இடத்திலே பணிகளைத் தொடங்குவதற்கு பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக அந்தப் பகுதியிலே வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் தடையாக இருக்கிறார்கள். ஆகவே, அதையும் சரிசெய்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. கல்லூரிக்கு ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகப் பயன்படுத்தி, அந்தக் கல்லூரி முழுமையாகப் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*